மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) அரசின் நிபந்தனைகளை நிர்வாகத்தினர் நிறைவேற்றாத தால் அக்கல்லூரியை அரசு ஏற்று நடத்த இயலாது என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

*** 301 வினா—திரு. நா. வெ. குருசாமி:** மாண்புமிகு கல்வி-சுற்று லாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், தேனி நகரத்தில் "அரசினர் ஆண்கள் கலைக் கல்லூரி" துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை. ஐந்து இலட்ச ரூபாய் நிதி திரட்டி, மற்ற நிபந்தனைகளும் நிறைவேற்றப் பட்டால், இக்கோரிக்கை பரிசீலனை செய்யப்படும்.

*** 302 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-சுற்று லாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மாயூரத்தில் அரசினர் ஆண்கள் கல்லூரி ஒன்றினைத் துவக்கிட அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: உத்தேசம் இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாயூரத்திற்குப் பக்கத்தில் ஏ.வி.சி. என்ற தனியார் கல்லூரி இருக்கிறது. அரசாங்கம் அதற்கு லட்சக்கணக்கான ரூபாய் மானியம் தருகிறது என்றாலும் அந்தக் கல்லூரியில் எவ்வளவு அதிக மார்க்குகள் வாங்கி யிருந்தாலும் கூட வன்னிய குலத்தைச் சேர்ந்த மாணவர்களைச் சேர்ந்துக்கொள்ள மறுத்து வருகிறார்கள். அதுபற்றி, பல தடவை இந்த மன்றத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே அங்கே யுள்ள வன்னியகுல மாணவர்களின் நலனைக் கருதியாவது தனி யாகவே ஒரு அரசுக் கல்லூரியை அங்கே நிறுவ முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நான் முதலில் குறிப்பிட்டபடி இப்போது அதற்கான உத்தேசம் இல்லை. மாயூரத் திலேயே ஒரு கல்லூரி இருக்கிறது. அங்கிருந்து பத்து மைலுக்குள்

1973 நவம்பர் 22]

பூம்புகாரில் ஒரு கல்லூரி இருக்கிறது. கும்பகோணத்தில் ஒரு கல்லூரி இருக்கிறது. மேலும், ஏற்கனவே அங்கு வைத்த பெண்கள் கல்லூரிக்கு குறிப்பிட்ட தொகையை வசூலித்துத் தருவதில் அங்குள்ளவர்கள் அக்கறை காட்டவில்லை. இதுபோன்ற பல காரணங்களால் மேற்கொண்டு ஒரு கல்லூரியை மாயூரத்தில் ஏற்படுத்த பெரும் செலவை ஏற்க நிதிநிலை இடம் தராது.

உறுப்பினர் குறிப்பிட்டதைப்போன்று மாயூரத்திற்கு அருகில் உள்ள தனியார் கல்லூரியில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில் முறைகேடு இருக்குமானால் பரிசீலிக்கலாம். பிற்பட்ட மாணவர்கள், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குள்ள விகிதாசார அடிப்படையில்தான் அவர்கள் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை நாம் வற்புறுத்தி வருகிறோம். பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான விகிதாசாரம் அளிக்கப்படவில்லை என்கிற குறைபாடு அங்கே இருக்குமானால் நாம் அதை நீக்க வேறு வழிமுறைகளை மேற்கொள்ளலாம்.

திரு. டி. வி. சம்பத்: மாயூரத்திற்கு அருகிலுள்ள ஏ.வி.சி. கல்லூரியில் கழக அரசு பிற்பட்டவர்களுக்கு 31 சதவிகிதம், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவிகிதம் என்று ஒதுக்கியிருந்தும் கூட அங்கே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் யாரையுமே நியமிக்காத குறை இருக்கிறது. அது சம்பந்தமாக, அரசுக்கு விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கல்லூரியில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வது சம்பந்தமாகத்தான் அந்த விகிதாச்சாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அரசாங்கக் கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தவரை நாம் அந்த விகிதாச்சாரத்தைப் பின்பற்றினாலும், தனியார் கல்லூரிகளைப் பொறுத்தவரை அதனை நாம் வற்புறுத்த இயலாது.

திரு. ந. சோமசுந்தரம்: மாயூரம் அருகில் உள்ள ஏ.வி.சி. கல்லூரியில் உயர்ந்த மதிப்பெண்கள் பெற்ற வன்னியர் குல மாணவர்களைக் கூடச் சேர்த்துக்கொள்ள மறுக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? ஆகவே அரசுக் கல்லூரி ஒன்றை அங்கே துவக்க விரைவில் நடவடிக்கை எடுப்பார்களா?

[1973 நவம்பர் 22

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நான் முதலிலேயே புதிய கல்லூரி ஒன்றை அங்கே துவங்க முடியாமல் இருப்பதற்கான காரணங்களைச் சொன்னேன். இருக்கின்ற கல்லூரிகளைச் செம்மைப் படுத்துவதில் நாம் அதிகக் கவனம் செலுத்தியாக வேண்டிய நிலையில் இருக்கிறோம். புதுப் புதுக் கல்லூரிகளை ஏற்படுத்திக் கொண்டே போவதைவிட இருக்கிற கல்லூரிகளைச் செம்மைப் படுத்தவேண்டும் என்கிற அடிப்படையிலேயே நாம் கவனம் செலுத்துகிறோம். மாயூரத்தின் அருகில் உள்ள கல்லூரியில் குறைபாடு இருக்கிறது என்றால் அதை நீக்க நடவடிக்கை மேற் கொள்ளலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): தலைவர் அவர்களே, மாயூரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் தம்முடைய கேள்வியில் குறிப்பாக, அந்தக் கல்லூரியில் அதிக மார்க்குகள் வாங்கியிருந்தாலும் கூட வன்னிய குல மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள மறுக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசியல் சட்டத்தின் 14-வது பிரிவுப்படி சாதி அடிப்படையில் இடம் இல்லை என்று சொல்ல முடியாது. அப்படி அங்கே பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்த வன்னிய குல மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டால் அதற்குக் காரணம் என்ன? ஏன் இடம் தர வில்லை? உடனடியாக அதிகாரிகளைவிட்டு அதுபற்றி விசாரிப்பார் களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மாயூரம் சட்டமன்ற உறுப்பினர் அதுபற்றிய குறிப்புகளைத் தந்தால் அதனைப் பரிசீலிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): I ask your protection, Sir, இந்த ஆண்டு எத்தனை பேர் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள், எத்தனை பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக் கிறார்கள், சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களைவிட அதிக மார்க்குகள் பெற்றுள்ள யார்யார் மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன என்பதை டைரெக்டர் ஆப் கலிஜியேட் எஜுகேஷனிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியாதா? இதற்கு மாயூரம் சட்ட மன்ற உறுப்பினர் யார் யார் மனுக்கள் போட்டார்கள், யார் யார்

1973 நவம்பர் 22]

மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்கிற விவரங்களை எல்லாம் தினத் தந்தியில் விளம்பரம் செய்துதான் தெரிந்துகொள்ள வேண்டுமா? இதற்கு அமைச்சரவை தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நாங்கள் எல்லாக் கல்லூரிகளையும்தான் அதுபோன்ற விவரங்களைத் தரும்படி கேட்கிறோம். அவர்களும் தருகிறார்கள். அரசு குறிப்பிட்ட விகிதாசார அடிப்படையில் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பதாகவும், ஊழல் எதுவும் இல்லை என்றே தெரிவிக்கிறார்கள். இருந்தும் எங்காவது முறைகேடு இருக்கிறது என்றால் அதுபற்றிய விவரங்கள் கொடுத்தால்தான் அவர்கள் கொடுத்துள்ள விவரங்களோடு ஒப்பிட்டு, குறைபாடு இருக்கிறதா, இல்லையா என்பதைக் கண்டறிய முடியும். அவர்கள் கொடுக்கிற விவரங்களை வைத்தே நாம் பார்க்கிறபோது எல்லாம் சொட்டமனகத்தான் இருக்கும். தவறுகள் இருக்கின்றன என்பதற்கான குறிப்புகள் கிடைக்கிற போதுதான் அதன்மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வாய்ப்பு உண்டு.

Cotton cultivation by Textile Corporation.

* 313 Q. THIRU N. DENNIS
THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Textile Corporation of this State has undertaken any special scheme for the promotion of cotton cultivation; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிற பஞ்சில் 200 கவுன்ட்ஸ் வரையிலும் நூல் உற்பத்தி ஆகிறது. ஆகவே, அந்த மாதிரி நம் நாட்டு பருத்தியிலேயே 200 கவுன்ட்ஸ் கொண்டு வருவதற்கான ஆராய்ச்சி செய்யக்கூடிய முறையிலே சர்க்கார் ஆராய்ச்சிக் குழுவிற்கு அறிவுரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.